# ADM COURT, SANKARANKOVIL

**தேதி 01.09.2025**

**அசல் வழக்கு எண். 224/2017**

**பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் எப்போது மருத்துவப்படிப்பை முடித்தேன் என்றால் 1982ம் வருடம் எனது மருத்துவப்படிப்பை முடித்தேன். நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனை மருத்துவக்கல்லூரியில் எந்த ஆண்டிலிருந்து எந்த ஆண்டு வரை பணி செய்தேன் என்றால் 1991ம் ஆண்டு முதல் 2014ம் ஆண்டு வரை பணி செய்தேன். எனக்கு திருநெல்வேலியில் சொந்த வீடு உள்ளது என்றால் சரிதான். நான் தற்போது திருநெல்வேலியில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறேனா என்றால் நான் தற்காலிகமாக சென்னையில் குடியிருந்து வருகிறேன். நான் சென்னையில் எனது சொந்த வீட்டில் குடியிருந்து வருகிறேனா என்றால் இல்லை வாடகை வீட்டில் குடியிருந்து வருகிறேன்.

2. பிராது தபசில் சொத்து எனது குடும்பத்திற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் மேற்படி சொத்தை எனது தந்தை வாங்கினார். நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழககுரையில் பிராது தபசில் சொத்தை எனது தந்தை எந்த ஆண்டு எந்த ஆவணம் மூலம் யாரிடமிருந்து கிரையம் பெற்றார் என்ற விபரங்களை கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். பிராது தபசில் சொத்தை எனது தந்தை கிரையம் பெற்றதற்கான ஆவணம் எனது கைவசம் உள்ளதா என்றால் உள்ளது. பிராது தபசில் சொத்தை எனது தந்தை கிரையம் பெற்றதற்கான ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எனது தந்தை அவரது மறைவிற்கு முன்பு உயில் ஏதும் ஏற்படுத்திவைத்திருந்தாரா என்றால் இல்லை. எனது தந்தை மறைவிற்கு முன்பு பிராது தபசில் சொத்து பொறுத்து பதிவு செய்யப்பட்ட பாகபிரிவினை ஆவணங்கள் ஏதும் ஏற்படுத்தப்பட்டனவா என்றால் இல்லை.

3. எனது தந்தைக்கு என்னையும், 1ம் வாதியான வர்கீஸ்யும் தவிர்த்து வேறு குழந்தைகள் இல்லை என்றால் சரியல்ல. எனது தந்தையின் வாரிசுகளை குறிப்பிடும் வாரிசுசான்றிதழ் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை இறப்பிற்கு பிறகு அவரது வாரிசுசான்றிதழ் வேண்டி மனு தாக்கல் செய்திருந்தேனா என்றால் மனு அளித்தேன். நான் எனது தந்தையின் வாரிசுசான்றிதழ் கோரி மனு தாக்கல் செய்ததை காண்பிக்கும் ஆதாரம் ஏதும் என்னிடம் உள்ளதா என்றால் தற்போது என்னிடம் ஆதாரம் இல்லை. எனது தந்தையின் வாரிசுசான்றிதழ் கோரி நான் தாக்கல் செய்த மனுவில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்று என்னால் கூற இயலுமா என்றால் இயலாது.

4. நான் எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ள 1994ம் வருட வாய்மொழி குடும்ப ஏற்பாடு யார் முன்னிலையில் நடைபெற்றது என்று கூறவில்லை என்றால் அந்த குடும்ப ஏற்பாடு ஊர் பெரியவர்கள் முன்னிலையில் ஏற்படுத்தப்பட்டது. 1994ம் வருட குடும்ப ஏற்பாடு எந்த கிராமத்தில் வைத்து ஏற்படுத்தப்பட்டது என்றால் ஆயாள்பட்டி கிராமத்தில் வைத்து ஏற்படுத்தப்பட்டது. 1994ம் வருட வாய்மொழி குடும்ப ஏற்பாட்டிற்கான நேரடி சாட்சிகள் எங்கள் ஊரில் உள்ளனரா என்றால் 1,2 சாட்சிகள் இருப்பர். 1994ம் வருடம் வாய்மொழி குடும்ப ஏற்பாடு நடைபெறவில்லை என்றாலும், மேற்படி குடும்ப ஏற்பாட்டில் இவ்வழக்கின் வாதி பொதுக்குடும்ப சொத்துக்கள் தேவையில்லை என்று பொதுக்குடும்பத்தை விட்டு விலகிச்செல்லவில்லை என்றாலும் சரியல்ல.

5. நான் எனது எதிர்வழககுரையில் கூறியுள்ள வாதியால் ஏற்படுத்தப்பட்டதாக சொல்லப்படும் 23.11.1994 தேதியிட்ட ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கின் 1ம் வாதி நான் கூறியதுபோல் 23.11.1994 தேதியிட்ட ஆவணத்தை பிறப்பித்துக் கொடுக்கவில்லை என்றாலும், அவ்வாறு ஆவணம் ஏதும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தால் அது என்னால் உற்பத்தி செய்யப்பட்ட ஆவணம்

என்றாலும் சரியல்ல. எனது தந்தை அவர் இறப்பதற்கு முன்புவரை ஆயாள்பட்டி கிராமத்தில்தான் இருந்தார் என்றால் சரிதான். நான் எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ளதுபோல் எனது தந்தை அவர் இறப்பதற்கு முன்புவரை என்னால் பராமரிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. 1994ம் வருடம் முதல் பிராது தபசில் சொத்தை நானும், எனது தந்தையும் அனுபவம் செய்து வந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6. 2002ம் வருடம் ஜனவரி மாதம் பிராது தபசில் சொத்தை எனது தந்தை வாய்மொழியாக என்னிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. 2002ம் வருடம் ஜனவரி மாதம் பிராது தபசில் சொத்தை எனது தந்தை என்னிடம் வாய்மொழியாக ஊர் பெரியவர்கள் முன்னிலையில் ஒப்படைத்ததற்கான சாட்சி ஏதும் உள்ளனரா என்றால் சாட்சிகள் உண்டு. எனது தந்தைக்கு நான் மருத்துவசிகிச்சை அளித்தற்கான சான்றாவணம் ஏதும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தை எங்கு வைத்து இறந்தார் என்றால் ஆயாள்பட்டி கிராமத்தில் வைத்து இறந்தார். எனது தகப்பனாரின் இறப்பை பதிவு செய்வதற்கு மனு அளித்திருந்தேனா என்றால் மனு அளித்தேன். எனது தந்தையின் இறப்புச்சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் எனது தந்தையின் இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் எனது தந்தையின் இறப்பிற்கு முன்பு அவரை பராமரிக்கவில்லை என்றாலும், இவ்வழக்கின் 1ம் வாதி உடன் இல்லாமல் எனது தந்தையை நல்லடக்கம் செய்யவில்லை என்றாலும் சரியல்ல.

7. 10 சென்ட் விஸ்தீரணம் உள்ள பிராது தபசில் சொத்தில் 5 சென்ட் காலியிடமாகவும், மீதமுள்ள 5 சென்டில் 2 பத்தி கொண்ட ஒரு வீடு உள்ளது என்றாலும் சரிதான். மேற்படி பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டில் 2 குடும்பங்கள் தங்க இயலுமா என்றால் இயலும். எனது தகப்பனார் உயிருடன் இருந்தவரையில் சொத்து சம்பந்தமாக எனக்கும், 1ம் வாதிக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டது இல்லை என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தில்

உள்ள வீட்டின் வாசல் எந்த திசையை நோக்கி உள்ளது என்றால் வடக்கு திசையை நோக்கி உள்ளது. பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டின் கிழக்கு பாகத்தை 2013ம் வருடம் நான் இடித்து கட்டினேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் உள்ள வீடு எந்த ஆண்டு கட்டப்பட்டது என்றால் எனது சிறுவயதில் கட்டப்பட்டது. எனது தற்போதைய வயது 70 என்றாலும், பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டின் வயது சுமார் 60 ஆண்டுகள் இருக்கும் என்றாலும் சரிதான். பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டிற்கான பட்டா இன்றளவும் எனது தந்தை பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் எனது எதிர்வழக்குரையில் கூறியுள்ள 1994ம் வருட வாய்மொழி குடும்ப ஏற்பாட்டை பொறுத்தோ, 2002ம் வருடம் எனது தந்தை எனக்கு அளித்த வாய்மொழி ஒப்படைப்பை பொறுத்தோ பிராது தபசில் சொத்திற்கான பட்டா மாற்றம் ஏதும் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1994ம் வருடம் முதல் இன்றுவரை பிராது தபசில் சொத்திற்கான பட்டா மாற்றம் குறித்து மனு ஏதும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

8. நான் தாக்கல் செய்துள்ள பி.வாசா.ஆ.1 ரசீதுகள் எனது தந்தை மாடசாமி பெயரில் வழங்கப்பட்டன என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வாசா.ஆ.1 ரசீதுகளில் பணம் செலுத்தியவர் பெயர் மற்றும் கையொப்பம் ஆகிய பதிவுகளில் முறையே எனது பெயரோ எனது கையெழுத்தோ இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள பி.வாசா.ஆ.2 மின்சார கட்டண ரசீதுகள் எனது தந்தை பெயரில் உள்ளன என்றாலும், அதில் குறிப்பிடப்பட்டுள்ள மின்சார இணைப்பும் எனது தந்தை பெயரில் உள்ளது என்றாலும் சரிதான். இவ்வழக்கின் வாதி பிராது தபசில் சொத்து பொறுத்து தீர்வைகள் செலுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. பிராது தபசில்சொத்து பொறுத்து எனக்கும், 1ம் வாதிக்கும் இடையில் 2013ம் வருடத்திலிருந்து பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். 2013ம் வருடம் இவ்வழக்கின் வாதியான வர்கீஸ் தனது உறவினர் சுடலைமணி என்பவரை நியமித்து பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டின் மேற்குபாகத்தில்

கட்டுமானம் செய்தபோது தான் எனக்கும், 1ம் வாதிக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். மேற்படி சுடலைமணி வர்கீஸ்ன் உறவினர் கிடையாது. சுடலைமணி எங்கள் ஊரைச்சேர்ந்தவர்.

9. 2013ம் ஆண்டு இவ்வழக்கின் வாதி தொலைதொடர்பு துறையில் வேலை செய்து பணி ஓய்வு பெற்றிருந்தார் என்றால் சரிதான். இவ்வழக்கின் 1ம் வாதி 2013ம் வருடம் எங்களுக்குள் ஏற்பட்ட பிரச்சனை தொடர்பாக காவல்நிலையத்தில் எனக்கு எதிராக புகார் அளித்தார் என்றால் சரிதான். மேற்படி 1ம் வாதி அளித்த புகாரின்பேரில் காவல்நிலையத்தில் பலமுறை விசாரணை செய்யப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனை தொடர்பாக காவல்நிலையத்தில் விசாரணைக்காக ஆஜரானபோது அங்கு வைத்து 1ம் வாதியும், நானும் வாக்குமூலங்கள் கொடுத்தோம் என்றால் சரிதான். எனது தகப்பனாரின் மறைவிற்கு பிறகு எங்களது குடும்பத்தில் பதிவு செய்யப்பட்ட பாகப்பிரிவினை ஏதும் ஏற்படுத்தப்பட்டதா என்றால் இல்லை. பிராது தபசில் சொத்தை தவிர்த்து வேறு சொத்துக்களும் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்டு உள்ளன என்றால் சரிதான். பிராது தபசில் சொத்தை பொறுத்து எனது தந்தை இறந்ததற்கு பிறகு முறையான பாகப்பிரிவினை ஏதும் ஏற்படுத்தப்படாததால் எனது தந்தையின் அனைத்து வாரிசுகளுக்கும் அந்த சொத்தை பொறுத்து உரிமை உள்ளது என்றால் சரிதான்.

10. 19.06.2013ம் தேதி காவல்நிலையத்தில் வைத்து நானும், 1ம் வாதியும் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொண்டோம் என்றால் சரியல்ல. 19.06.2013ம் தேதி காவல்நிலையத்தில் வைத்து எனக்கும், 1ம் வாதிக்கும் இடையில் ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுது என்றாலும், அந்த ஒப்பந்தத்தின் பேரில் பிராது தபசில் சொத்தில் உள்ள வீட்டின் மேற்குபாகம் 1ம் வாதிக்கும், கிழக்கு பாகம் எனக்கும் ஒதுக்கப்பட்டன என்றால் சரியல்ல. மேற்படி ஒப்பந்தத்தில் பிராது தபசில் சொத்திற்கு வடக்குபக்கம் உள்ள 5 சென்ட் காலியிடம் பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்று என்னால் ஒப்புக்கொள்ளப்பட்டது என்றால் சரியல்ல.

19.06.2013ம் தேதியில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அதே தேதியில் முடிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

11. சர்வே எண்.1605/13ல் உள்ள இடத்தின் மொத்த விஸ்தீரணம் 10 சென்ட்என்றால் சரிதான். சர்வே எண்.1605/13ல் கட்டப்பட்டுள்ள வீட்டின் மேற்கு மற்றும் கிழக்கு பாகங்கள் முறையே தலா 2–1/2 சென்ட் விஸ்தீரணம் கொண்டது என்றால் சரிதான். சர்வே எண்.1605/13ல் உள்ள வீட்டின் மேற்குபாக வீடான பிராது தபசில் சொத்து 1ம் வாதியின் அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் வாதி தாமாகவோ, அல்லது முகவர் மூலமாகவோ கட்டுமானம் ஏற்படுத்துவதையும், பராமரிப்பதையும் தடுப்பதற்கு எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு ஏதும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

12. எனது நிரூபண உறுதிக்கூற்றில் குறிப்பிட்டுள்ள எனது சகோதரிகளான சீதாலட்சுமி, ராஜலட்சுமி மற்றும் அவர்களது மக்கள் பிராது தபசில் சொத்தை 1ம் வாதி அனுபவம் செய்வதை தடுக்கவில்லை என்றால் பிராது தபசில் சொத்திற்கு 1ம் வாதி வருவதில்லை. எனது தாயார் நல்லம்மாள் எனது தந்தை கருப்பசாமிக்கு 2வது மனைவி என்பதால் எனது தாயார் எனது தந்தையின் வாரிசாக கருதப்படமாட்டார் என்றால் சரியல்ல. எனது தாயார் மற்றும் எனது சகோதரிகள் இவ்வழக்கிற்கு அவசியதரப்பினர்கள் இல்லை என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தில் எனக்கும், 1ம் வாதிக்கும் கூட்டனுபவம் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. வாதி தனதுதாக்கல் செய்துள்ள வழக்குரையில் கோரியுள்ள நிரந்தர ஏவுகட்டளை பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**